வருடாந்திர செயல்திறன் அறிக்கைகள் மற்றும் கணக்குகள்

2021

பொது சேவைகள், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சு

சுதந்திர சதுக்கம்
கொழும்பு 07

டெல். தொலைபேசி	: 0112626211-3
தொலைநகல்	: 011-2695279
மின்னஞ்சல்	: info@pubad.gov.lk
இணைய முகவரி	: www.pubad.gov.lk

கௌரவ அமைச்சர் அவர்களின் வாழ்த்துச் செய்தி



சுபீட்சமானதொரு தேசத்தை கட்டியெழுப்பும் நோக்கில் மேன்மைதங்கிய ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ அவர்களினால் முன்வைக்கப்பட்ட அரசாங்கத்தின் தேசிய கொள்கையான "சுபீட்சத்தின் நோக்கு" கொள்கைத் திட்டம் நாட்டின் சமூக, பொருளாதார மற்றும் கலாசாரம் ஆகிய அனைத்து துறைகளையும் உள்ளடக்கிய வகையில் நடைமுறைப்படுத்தப்பட்டு வருகின்றது. இதன் மூலம் தேசத்தின் தனித்துவத்தையும் தேவைகளையும் உள்ளடக்கிய மிகவும் நடைமுறை சாத்தியமான பயனுள்ள மூலோபாய திட்டமொன்று வெளியிடப்பட்டுள்ளது. இந்த வேலைத்திட்டத்தின் நோக்கம் அனைத்து மக்களுக்கும் ஏற்ற வகையில் இந்த நாட்டின் பாதுகாப்பு, முன்னேற்றம் மற்றும் அபிவிருத்திக்கான அர்ப்பணிப்புடன் அனைவருக்கும் சம வாய்ப்புகளை வழங்குவதற்கான மூலோபாயத்தை நடைமுறைப்படுத்துவதாகும். "நாட்டிற்காக உழைக்கும் கலாச்சாரத்தை" உருவாக்குவதை நோக்கமாகக் கொண்ட அந்த புதிய தொலைநோக்கை யதார்த்தமாக்குவதற்கு, அதற்கேற்ற வகையில், இந்த நாட்டின் அரசியல்வாதிகளும் அதிகாரிகளும் பொதுமக்களும் உளப்பாங்கு ரீதியாகவும் செயற்பாட்டு ரீதியாகவும் புதிய திசையில் பயணிக்க வேண்டும். நாட்டைப் புதிய பாதையில் முன்கொண்டு சென்று, எதிர்பார்த்த வகையில் நாட்டை கட்டியெழுப்புவதற்கு, நாம் அனைவரும் கூர்ந்த அறிவோடும் உணர்வோடும் செயற்படுவது கட்டாயமாகும்.

இந்தச் சூழலில், மக்கள் நேய பொதுச் சேவையின் புதிய பரிமாணங்களையும் வடிவங்களையும் அடையாளம் கண்டு பொது நிர்வாகத் துறை புதியதோர் திசைவழியில் பயணிக்கின்றது. அந்த வகையில், அரச சேவைகள் அமைச்சு கோவிட் *19* தொற்றுநோய் சூழ்நிலையினால் உலகெங்கிலும் உள்ள மக்களின் வாழ்க்கை கடுமையான சவால்களை எதிர்கொண்டிருந்த காலப்பகுதியிலும் கூட, அரச சேவைகள் அமைச்சு மற்றும் அதன் கீழ் இயங்கும் அரச கருமமொழிகள் திணைக்களம், ஓய்வூதியத் திணைக்களம், இலங்கை அபிவிருத்தி நிர்வாக நிறுவனம், இலங்கை உள்ளூராட்சி நிறுவனம், அரச கருமமொழிகள் ஆணைக்குழு, தேசிய மொழிக் கல்வி மற்றும் பயிற்சி நிறுவனம், மனித வள அபிவிருத்திக்கான தேசிய சபை மற்றும் இலங்கை அரச சேவை பரஸ்பர சகாயச் சங்கம் ஆகிய நிறுவனங்கள் அவற்றின் சேவைப் பொறுப்புகளை முடிந்தளவுக்கு நிறைவேற்றுவதில் வழங்கிய பங்களிப்பை நன்றியுடன் நினைவுகூர வேண்டும்.

நாட்டின் அபிவிருத்திக்கு பட்டதாரிகளை பங்களிக்கச் செய்யும் நோக்கத்துடன் ஆரம்பிக்கப்பட்ட வேலையற்ற பட்டதாரிகளுக்கான வேலைவாய்ப்புத் திட்டத்தின் கீழ் *53,177* பட்டதாரிகளுக்கு அரச சேவையில் பிரவேசிப்பதற்கான வாய்ப்புகளை வழங்குதல், புதிய உத்தியோகத்தர்களை ஆட்சேர்ப்பு செய்வதன் மூலம் இலங்கை பொறியியல் சேவை மற்றும் இலங்கை விஞ்ஞான சேவையின் வினைத்திறனை மேம்படுத்துவதற்கு வழிசெய்தல், டிஜிட்டல் மயமாக்கல் மூலம் அலுவலக பணிகளை மேற்கொள்ளும் திட்டத்தை அறிமுகப்படுத்தியமை மற்றும் வெளிநாட்டு உதவியுடன் கிராமிய மருத்துவமனைகள் மற்றும் பாலங்கள் நிர்மாணம் போன்ற புதிய திட்டங்களை அறிமுகப்படுத்தியதன் ஊடாக கிராமப்புற உட்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்த நடவடிக்கை எடுத்தல் உள்ளிட்ட பல சாதனைகளுக்கு வழிவகுத்தது.

அதன்படி, தொடர்ந்தும் நாட்டின் பெருமைமிக்க பயணத்திற்கு பலமாகவும் ஒளியாகவும் இருந்து மக்கள் நேய அரச சேவையை நிறுவும் முக்கியமான பணியை முன்னெடுத்துச் செல்ல அனைத்து அரச உத்தியோகத்தர்களையும், ஓய்வுபெற்ற உத்தியோகத்தர்கள் மற்றும் பொதுமக்களையும் நான் அன்புடன் அழைக்கிறேன். இந்தப் பணிக்காக அர்ப்பணிப்புடன் பணியாற்றும் எனது அமைச்சின் செயலாளர் தலைமையிலான பணிக்குழாமினர் மற்றும் அமைச்சின் கீழ் இயங்கும் ஏனைய நிறுவனங்களின் தலைவர்கள் உட்பட பணிக்குழாமினர்களுக்கும் நன்றியை தெரிவித்துக் கொள்கிறேன்.

தினேஷ் குணவர்த்தன,
பொது நிர்வாகம், உள்நாட்டலுவல்கள், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சர்
இலங்கை பாராளுமன்ற சபை முதல்வர்

அரச சேவைகள், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சின் செயலாளரின் செய்தி



நாடளாவிய மற்றும் இணைந்த சேவைகள் உள்ளிட்ட அனைத்து அரச சேவைகளின் முழு இயலளவையும் விருத்தி செய்து நவீன தொழில்நுட்ப உத்திகளைப் பயன்படுத்துவதன் மூலம் தேசிய, மாகாண மற்றும் பிராந்திய மட்டங்களில் பொது மக்களுக்கு சிறந்த சேவையை வழங்குவதே இந்த அமைச்சின் முதன்மை செயல்பாடாக காணப்படுகின்றது. இந்த நோக்கத்திற்காக, அரசாங்கத்தால் பிரகடனப்படுத்தப்பட்டள்ள "சுபீட்சத்தின் நோக்கு" என்ற கொள்கை அறிக்கைக்கு ஏற்பவும் அரசினால் நடைமுறைப்படுத்த எதிர்பார்க்கும் ஏனைய தேசிய கொள்கைகளுக்கு ஏற்பவும் நாட்டிற்கான வேலைக் கலாச்சாரத்தை ஏற்படுத்துவதற்கும் மக்கள் மயப்படுத்தப்பட்ட பொருளாதாரத்தை விருத்தி செய்வதற்கும் அரச சேவையின் மூலம் பரந்த பங்களிப்பைப் பெற்றுக்கொடுக்க முடியுமான வகையில் கொள்கைகளைத் தொகுத்தல் மற்றும் சுற்றறிக்கைகள் மற்றும் ஒழுங்குமுறைகளை இற்றைப்படுத்துவதன் மூலம் அரச சேவையை செயற்படுத்துவதும் வழிகாட்டுவதும் மக்கள் மையப்படுத்திய அரச சேவையை ஏற்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டுமென்பது எனது உணர்வாகும். ஆனால் 2020 ஆம் ஆண்டு முழுவதும் காணப்பட்ட உலகளாவிய தொற்றுநோயை "கோவிட் 19" எதிர்கொண்டுள்ள நிலையில், உலகின் ஒவ்வொரு நாட்டிலும், இலங்கையின் ஒவ்வொரு அரச மற்றும் தனியார் துறையிலும் சில பின்னடைவுகள் ஏற்பட்டுள்ளது என்பது இரகசியமன்று. அத்தகைய சவாலுக்கு மத்தியிலும்ம கூட, 2020 ஆம் ஆண்டு இந்த அமைச்சின் செயற்பாடுகளுக்கு முன்னுரிமை அளிக்கவும், அவசர திட்டங்களை செயல்படுத்தவும் முடிந்தது என்பதையிட்டு நான் மகிழ்ச்சியடைகிறேன்.

மேற்படி நிகழ்ச்சித்திட்டங்களுக்கிடையே அபிவிருத்தித் திட்டங்களை விரைவாக நிறைவேற்ற பங்களிப்புச் செய்வதற்குரிய மனித வளத்தை வழங்கும் நோக்குடன் பட்டதாரி பயிலுநர்கள் அறுபதாயிரம் பேரை ஆட்சேர்ப்பு செய்தல், உத்தியோகத்தர்களுக்கான பயிற்சித் திட்டங்களை நடைமுறைப்படுத்தல், தேசிய வரவுசெலவுத் திட்டம், அரச முதலீடுகள் மற்றும் தேசிய அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டங்களின் கீழ் மாகாண சபைகளும் உள்ளூராட்சி நிறுவனங்களினதும் அபிவிருத்தித் திட்டங்கள், கிராமிய பொருளாதார பௌதீக உட்கட்டமைப்பு வசதிகள் மற்றும் சமூக உட்கட்டமைப்பு வசதிகளை விருத்தி செய்வதற்கு உரித்தான செயற்திட்டங்களை நடைமுறைப்படுத்தல், சிரேஷ்ட பிரஜைகளின் பொருளாதார மற்றும் சமூக நலனோம்பினை விருத்தி செய்தல், பாராளுமன்றத்துடன் தொடர்புடைய மற்றும் பாராளுமன்ற உறுப்பினர்களின் நடவடிக்கைகளுக்கு உரித்தான அரசினால் மேற்கொள்ளப்பட வேண்டிய செயற்பாடுகளை நிறைவேற்றல், அரச ஊழியர்களுக்கான உத்தியோகபூர்வ இல்லத் திட்டத்தை துரிதப்படுத்தல், நிறைவேற்றிய பணிகளில் ஒருசிலவற்றினை இவ்வாறு குறிப்பிட முடியும். 2020 ஆம் ஆண்டுக்காக பொதுத் திறைசேரியினால் ஒதுக்கப்பட்ட நிதி ஏற்பாடுகள் மற்றும் நிதியத்தை பயனுறுதி மற்றும் வினைத்திறனுடன் இவ்வமைச்சின் பிரதான தொலைநோக்கு, பணிக்கூற்று, நோக்கங்கள் மற்றும் செயற்பாடுகள் மற்றும் பணிகளை முற்படுத்தி அவ்வருடத்தினுள் எதிர்பார்க்கப்படும் அபிவிருத்தி இலக்குகளை அடைந்து கொள்ளும் வகையில் பயன்படுத்தப்பட்டுள்ளது என்பதனைக் குறிப்பிட விரும்புகின்றேன்.

இவ்வமைச்சின் மேற்படி பணிகளை வெற்றிகரமாக நிறைவேற்றுவதற்கு ஆலோசனை மற்றும் வழிகாட்டுதல் வழங்கிய கௌரவ அரச சேவைகள், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சர் ஜனக பண்டார தென்னகோன் அவர்களுக்கும், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி முன்னாள் இராஜாங்க அமைச்சர் ரியர் அட்மிரல் சரத் வீரசேகர அவர்களுக்கும் எனது நன்றியைத் தெரிவிக்க விரும்புகின்றேன். இந்த அமைச்சின் செயற்பாடுகளை வெற்றிகரமாகவும் திறமையாகவும் முன்னெடுப்பதற்கு அர்ப்பணிப்புச் செய்த மேலதிகச் செயலாளர்கள், பணிப்பாளர் நாயகங்கள், சிரேஷ்ட உதவிச் செயலாளர்கள், பணிப்பாளர்கள், பிரதான நிதி உத்தியோகத்தர்கள் உள்ளடங்கலாக ஒட்டுமொத்த பணியாட்தொகுதியினருக்கும் , இவ்வமைச்சின் கீழ் இயங்கும் திணைக்களங்கள், நியதிச் சட்டசபைகள் மற்றும் அரச கூட்டுத்தாபனங்களின் பிரதானிகள் உள்ளடங்கலாக அனைத்து ஊழியர்களுக்கும் எனது நன்றியைத் தெரிவித்துக் கொள்வதோடு, அடுத்தகட்ட நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கு உங்களது அர்ப்பணிப்பையும் ஒத்துழைப்பையும் தொடர்ந்தும் எதிர்பார்த்தவனாக, 2020 ஆம் ஆண்டின் வருடாந்த செயல்திறன் அறிக்கை மற்றும் கணக்கறிக்கைக்கு எனது வாழ்த்தினை சேர்த்துக் கொள்கின்றேன்.

ஜே.ஜே. ரத்னசிரி
செயலாளர்
அரச சேவைகள், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சு.

உள்ளடக்கம்

*	கொளரவ அரசாங்க சேவைகள், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சரின் ஆசிச் செய்தி	i
*	கொளரவ அரசாங்க சேவைகள், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சின் செயலாளர் அவர்களின் ஆசிச் செய்தி	ii
01	**நிறுவனஞ்சார் விபரத் திரட்டு**	
1.1	அறிமுகம்	1
1.2	தொலைநோக்கு, பணிக்கூற்று, குறிக்கோள்கள், உபாயங்கள்	2
1.3	பிரதான செயற்பாடுகள்	4
1.4	நிறுவனக் கட்டமைப்பு	5
1.5	அமைச்சின் கீழ் உள்ள நிறுவனங்கள்	6
02	**முன்னேற்றம் மற்றும் எதிர்கால தொலைநோக்கு**	
2.1	2021 ஆம் ஆண்டில் இடம்பெற்ற முக்கிய நிகழ்வுகள்	7
03	**வருடத்திற்கான ஒட்டுமொத்த நிதிச் செயலாற்றுகை**	
3.1	நிதிச் செயலாற்றுகை தொடர்பான கூற்றுகள்	27
3.2	கட்டு நிதி சீராக்கக் கணக்கு	28
3.3	நிதி நிலைமை தொடர்பான அறிக்கை	29
3.4	காசுப் பாய்ச்சல் தொடர்பான கூற்று	30
3.5	நிதி அறிக்கை குறிப்புகள்	31
3.6	வருமானச் சேகரிப்பு தொடர்பான செயலாற்றுகை	32
3.7	ஒதுக்கப்பட்ட நிதியைப் பயன்படுத்துவது தொடர்பான செயலாற்றுகை	33
3.8	நிதி அல்லாத சொத்து அறிக்கையிடலின் செயலாற்றுகை	34
3.9	கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை	
04	**செயலாற்றுகைக் குறிகாட்டிகள்**	
4.1	செயற்பாட்டுத் திட்டத்தை அடிப்படையாகக் கொண்ட நிறுவனஞ்சார் செயலாற்றுகைக் குறிகாட்டி செயற்பாட்டுத் திட்டத்திற்கமைய செயலாற்றுகைக் குறிகாட்டி (பிரிவு ரீதியாக)	35
	• இலங்கை கணக்காளர் சேவைப் பிரிவு	36
	• இலங்கை நிர்வாக சேவைப் பிரிவு	46
	• இலங்கை பொறியியலாளர் சேவைப் பிரிவு	50
	• இலங்கை விஞ்ஞான , கட்டிடக் கலைஞர் மற்றும் தொழில்நுட்ப சேவைப் பிரிவு	59

- இலங்கை திட்டமிடல் சேவை 71
- நிதிப் பிரிவு 74
- இணைந்த சேவைகள் பிரிவு 79
- உள்ளக நிர்வாகப் பிரிவு 109
- மனித வள அபிவிருத்திப் பிரிவு 111
- வீடமைப்புப் பிரிவு 114
- தாபனப் பிரிவு 115
- அபிவிருத்திப் பிரிவு 124
- புலனாய்வு, ஆராய்ச்சி மற்றும் செயற்பாட்டுப் பிரிவு 127
- தகவல் தொழில்நுட்ப பிரிவு 131
- ஓய்வூதியப் பிரிவு 140
- உள்ளக கணக்காய்வுப் பிரிவு 143
- தேசிய மொழிப் பிரிவு 145
- அரசகரும மொழிகள் திணைக்களம் 148
- தேசிய மொழிக் கற்கை மற்றும் பயிற்சி நிறுவனம் 158
- அரசாங்க சேவை ஆணைக்குழு 162
- ஓய்வூதியத் திணைக்களம் 165
- இலங்கை தேசிய மனித வள அபிவிருத்தி சபை 174
- வரையறுக்கப்பட்ட தொலைக்கல்வி நிலையம் 177
- பாராளுமன்ற விவகாரப் பிரிவு 177
- இலங்கை அபிவிருத்தி நிருவாக நிறுவகம் 181

06 மனித வளத் திட்டம்

6.1 அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினர் 2019 182

6.3 பணியாட்தொகுதியினரின் திறன் விருத்தி 189

07 இணக்கப்பாட்டு அறிக்கை 194

அரசாங்க சேவைகள், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சு அறிமுகம்

2020 ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 09 ஆந் திகதி முதல் அரச சேவைகள், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சாக பெயரிடப்பட்டாலும், ஆரம்பம் தொடக்கம் இன்று வரை சகல அரசாங்க நிறுவனங்கள் மற்றும் அரச ஊழியர்களின் முன்னேற்றத்திற்காக வளமான சேவையை வழங்கும் வகையில் பாரிய அர்ப்பணிப்புடனும் பொறுப்புக் கூறலுடனும் நடவடிக்கை எடுத்து வருகின்றது. இவ்வமைச்சானது கிட்டத்தட்ட 84 வருடங்களுக்கு முற்பட்ட கால வரலாற்றினைக் கொண்டுள்ளது. 1931 ஆம் ஆண்டுக்கு முன்னர் நிதி அமைச்சின் கீழ் திணைக்களம் ஒன்றாகவிருந்த இவ் அமைச்சானது 1931 ஆம் ஆண்டில் டொனமூர் சீர்திருத்தத்தின் பின்னரான பல்வேறுபட்ட நிலை மாற்றங்களை கண்டுள்ளதுடன் தற்போது பல்வேறுபட்ட அரசாங்கங்களின் கீழ் வெவ்வேறுபட்ட மாற்றங்களுக்கு முகங்கொடுத்து இன்று அது அரச நிர்வாகத்தில் அதிஉன்னத செயற்பாடுகளை நிறைவேற்றி வருகின்றது.

இவ் அமைச்சானது 2020 ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 09 ஆம் திகதியிலிருந்து அரச சேவைகள், மாகாண சபை கள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சு என்னும் பெயரின் கீழ் கௌரவ. ஜனக பண்டார தென்னகோன் அவர்களின் தலைமையின் கீழ் வந்துள்ளது. அத்துடன் இவ்வமைச்சின் இராஜாங்க அமைச்சாக மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி செயற்பட்டு வருகின்றது.

இன்று "அரசாங்க ஊழியர்களின் மஹகெதர" ஆகக் கருதப்படும், இவ் அமைச்சானது சகல அரச ஊழியர்களுக்கும் அவசியமான வழிகாட்டல்களைப் போன்றே அரச சேவைக்கான கொள்கைகள் மற்றும் திட்டங்களை உருவாக்குகின்றது. அத்தோடு "சுபீட்சத்தின் நோக்கு" எனும் கொள்கைப் பிரகடனத்தை முன்னிலைப்படுத்தி பாரிய அர்ப்பணிப்புடன் நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது. அதற்காக எதிர்பார்க்கும் இலக்குகளை அடைந்து கொள்ளும் முயற்சியில் முழு அலுவலர்களுக்குமான தலைமைத்துவத்தினை அமைச்சின் செயலாளர் திரு. ஜே.ஜே. ரத்னசிரி அவர்கள் வழங்கி வருகின்றார்.

பொது மக்களுக்கு திருப்திகரமான அரச சேவை வழங்குவதனை உறுதிப்படுத்தும் வகையில் நியாயமான தன்மை, ஒருமைப்பாடு மற்றும் வினைத்திறனின் பால் விஷேட கவனத்தினைச் செலுத்தி, நிர்வாக ஏற்பாடுகள் மற்றும் நிபந்தனைகளை தயாரித்தல் இவ்வமைச்சின் மீதுள்ள அடிப்படைப் பொறுப்பாகும். அதற்கிணங்க தாபன விதிக்கோவை மற்றும் அதனுடன் தொடர்புடைய அரசாங்க நிர்வாக சுற்றரிக்கைகளை தயாரித்தல், திருத்தியமைத்தல், தேவைப்படும் சந்தர்ப்பங்களில் அதனுடைன் தொடர்புடைய அவதானங்களை பெற்றுக்கொடுத்தல் இடம்பெறுகின்றது. அரசாங்க நிர்வாக நடவடிக்கைகள் தொடர்பாக தேசிய மட்டத்தில் கொள்கைகளை தயாரித்தல், பொருள்கோடல் மற்றும் அதனுடன் தொடர்பான வழிகாட்டல்களை வழங்குதல் என்பன இவ்வமைச்சின் மூலம் நிறைவேற்றப்படும் இன்னுமொரு அதிவிஷேட பணியாகும். அதனூடாக மிகவும் பயனுறுதி வாய்ந்த சேவையொன்றினை பெற்றுக்கொடுக்க முடியுமான வகையில் ஒட்டுமொத்த அரச சேவையினதும் செயற்பாடுகளை கட்டியெழுப்புதல் மற்றும் நிர்வாகம் இதனூடாக இடம்பெறுகின்றது.

தேசிய அபிவிருத்திச் செயற்பாடுகளை மேற்கொள்வதற்காக நாடளாவிய மற்றும் இணைந்த சேவைகளின் நிர்வாக நடவடிக்கைகளை நிறைவேற்றி அரச சேவையில் மனித வளத்தை மிக உற்பத்தித்திறன் வாய்ந்ததாக முகாமைத்துவம் செய்வதும் இவ்வமைச்சின் அடிப்படைப் பணிகளில் ஒன்றாகும்.

பொது நிதிச் சுற்றறிக்கை இல. 02/2020 இன் கீழ் தயாரிக்கப்பட்ட பொது நிருவாக மற்றும் அனர்த்த முகாமைத்துவ அமைச்சின் செயலாற்றுகை அறிக்கை மற்றும் கணக்குகள்

அரசாங்க சேவைகள், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சு

தொலைநோக்கு

தேசத்திற்கான சிறந்ததோர் அரச சேவை

பணிநோக்கு

சிறந்த நிர்வாகம், முகாமைத்துவம் மற்றும் சீர்திருத்தங்கள் என்பவற்றுக்கூடாக ஆற்றல் கொண்ட மனித வளங்களுடன் உன்னத அரச சேவையினை உறுதிப்படுத்தல்.

விடயப் பரப்பெல்லை

சகல அரச சேவையிலும் முழுமையான இயலளவு விருத்திகளை மேற்கொண்டு நவீன தகவல் தொழில்நுட்ப மூலோபாயங்கள் ஊடாக செயற்பாடுகளின் இரட்டிப்புத் தன்மையைத் தடுத்து சேவைப் பெறுநர்களுக்கு அதிசிறந்த சேவைகளை வழங்குதல் மற்றும் மாகாண மற்றும் பிரதேச மட்டத்தில் நிலவுகின்ற வேறுபாடுகளைக் குறைத்து மக்களுக்கு உயர் சேவையை உறுதிப்படுத்தல்.


நோக்கம்

- அரச சேவையின் மனித வள முகாமைத்துவக் கொள்கைக்கு ஏற்ப ஆட்சேர்ப்பு செய்தல், ஊதியம் மற்றும் ஏனைய சேவை நிபந்தனைகளுடன் தொடர்புடைய பயனுள்ள அரச கொள்கைகளைத் தயாரித்தல்.
- பொது மக்களின் தேவைகளுக்காக மறுமொழி வழங்கும் போது தற்போது அரசாங்க சேவையில் கடமையாற்றும் அலுவலர்களின் அபிலாசைகளுக்கு புதிய பாதையினை நோக்கி வழிநடாத்துகின்றது.
- அரசாங்க சேவையின் உற்பத்தித்திறன் மற்றும் தரத்தினை மேம்படுத்துவதற்காக புதிய முகாமைத்துவ கட்டமைப்பொன்றினை உருவாக்குதல் மற்றும் செயற்படுத்துதல்.
- பிரதான அமைப்பொன்றினை நிறுவி பரிமாறிக் கொள்ளல் (முடிவினை இலக்காகக் கொண்ட மனப்பாங்கு, பொறுப்புக்கூறல், வளங்களை சிறந்த முறையில் கையாளுதல், சார்புத் தன்மையற்ற, தூர நோக்கு போன்றன)
- அரச துறையில் வேண்டி நிற்கும் பயிற்சித் தேவைகளை இனங்காணல் மற்றும் பயிற்சி திட்டங்களுக்கு வசதிகளை வழங்குதல்.
- ஓய்வுதியத்துக்கு உரியதான சிக்கல்களை தீர்த்து வைப்பதற்காக ஓய்வூதிய நிகழ்ச்சித் திட்டங்களை உருவாக்குதல் மற்றும் செயற்படுத்துதல்.
- அரசின் அபிவிருத்தி இலக்குகள் மற்றும் முன்னுரிமைகளை பூர்த்தி செய்யும் இயலுமையுடன் கூடிய அரசாங்கப் பிரிவின் நிறுவாக விருத்திக்கான கட்டமைப்பினை தயாரித்துக் கொள்ளல்.
- சேவை வழங்களின் உற்பத்தித்திறன் மற்றும் தரத்தினை கட்டியெழுப்புவதற்காக தகவல் மற்றும் தொடர்பாடல் தொழிநுட்பத்தினை கையாள்வதை மேம்படுத்தல்..

- அரச சேவையின் பணியாட் தொகுதியினரின் செயற்திறன்களை விருத்தி செய்தல்.
- மாற்றமுறும் நிலைமைகளுக்கு ஏற்ப நடவடிக்கைகளை மேற்கொள்வதற்காக வேண்டி முறைமைகளை எளிதாக்குதல் மற்றும் செயலாக்கத்தினை மீண்டும் தயாரிப்பதற்கான வழிகாட்டல்களை மேம்படுத்தல், விருத்தி செய்தல் மற்றும் செயலுருப்படுத்துதல்.

மூலோபாயங்கள்

- அரச சேவையின் வினைத்திறனினை சிறந்த வகையில் வள முகாமைத்துவத்துக்கான பகுத்தறிவுடன் கூடிய கொள்கை மற்றும் ஒழுங்குமுறை கட்டமைப்பு
- அரச சேவையினை வழங்கும் போது உற்பத்தித்திறனினை மேம்படுத்துவதன் பொருட்டு செயலாக்கத்தினை மீண்டும் தோற்றுவித்தல் மற்றும் அமைப்பு ரீதியான விருத்திக்கான நிர்வாக சீர்திருத்தம்.
- அரச சேவைக்கான போட்டித் தன்மை ரீதியான ஆட்சேர்ப்புக்கள் மற்றும் தேர்ந்தெடுக்கும் செயல்முறைகள்.
- கோரிக்கை சார்புடைய இயலுமை விருத்தி மற்றும் திறன்களை ஒப்பிடல்
- சேவை வழங்கலினை பொது மக்களுக்கு அண்மிக்கச் செய்தல் மற்றும் பன்முகப்படுத்தப்பட்ட நிறுவனம் சார் வலையமைப்பு.
- அரசாங்க சேவையின் தரத்தினை உயர்த்துதல் மற்றும் சேவை வழங்கலின் வெளிப்படைத் தன்மைக்காக தகவல்கள் மற்றும் தொடர்பாடல் தொழில்நுட்பத்தினைப் பயன்படுத்துதல்.
- பொதுமக்களை மையப்படுத்திய அரசாங்க சேவையின் பால் சார்ந்த சேவை வழங்கலினை தரமிக்கதாக மாற்றுவதற்காக குடிமகன் / சேவைப் பெறுநர் பட்டயம்




பிரதான செயற்பாடுகள்

1. *"சுபீட்சத்தின் நோக்கு" கொள்கைப் பிரகடனத்தின் படி மற்றும் அரசினூடாக நடைமுறைப்படுத்த எதிர்பார்க்கப்படும் ஏனைய தேசிய கொள்கைகளின் மீது அமைந்துள்ள "நாட்டிற்கான வேலைக் கலாசாரம்" இனை ஏற்படுத்தும் வகையில் குறித்த இராஜாங்க அமைச்சுக்களுக்கான கொள்கை ரீதியான வழிகாட்டல்களை மேற்கொள்ளல் மற்றும் அரச சேவைகள், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி விடயத்துக்கு உரித்தான கொள்கைகளை வகுத்தல், தேசிய வரவுசெலவுத் திட்டம், அரச முதலீட்டு மற்றும் தேசிய அபிவிருத்தி வேலைத்திட்டத்தின் கீழமைந்த செயற்திட்டங்களை நடைமுறைப்படுத்தல் மற்றும் அமைச்சுக்குரிய திணைக்களங்கள், அரச கூட்டுத்தாபனங்கள் மற்றும் நியதிச் சட்ட சபைகளின் விடயங்கள் மற்றும் பணிகளுடன் அவற்றுடன் தொடர்பான கொள்கைகளைத் தொகுத்தல், நிகழ்ச்சித்திட்டங்கள் மற்றும் செயற்திட்டங்களை நடைமுறைப்படுத்தல், தொடர் நடவடிக்கை எடுத்தல் மற்றும் மதிப்பீடு செய்தல்.*

2. *இலங்கை நிர்வாக சேவை, இலங்கை கணக்காளர் சேவை, இலங்கை திட்டமிடல் சேவை, இலங்கை பொறியியலாளர் சேவை, இலங்கை விஞ்ஞான சேவை, இலங்கை கட்டிடக் கலைஞர் சேவை, இலங்கை தகவல் தொழில்நுட்பச் சேவை மற்றும் இணைந்த சேவைகளின் தாபன, நிர்வாக மற்றும் ஆளணி முகாமைத்துவம்*

3. *பாராளுமன்றத்துடன் தொடர்பான மற்றும் பாராளுமன்ற உறுப்பினர்களின் நடவடிக்கைகளுடன் தொடர்புடைய அரசினால் நிறைவேற்ற வேண்டிய செயற்பாடுகள்*

அரசாங்க சேவைகள் , மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சு
நிறுவனக் கட்டமைப்பு



அமைச்சின் கீழ் உள்ள நிறுவனங்கள்

திணைக்களம்

1. **ஓய்வூதியத் திணைக்களம்**
2. **அரசகரும மொழிகள் திணைக்களம்**

நிறுவனங்கள்

1. **இலங்கை அபிவிருத்தி நிருவாக நிறுவகம்**
2. **தொலைக்கல்வி நிலையம்**
3. **தேசிய மொழிக் கற்கை மற்றும் பயிற்சி நிறுவனம்**
4. **தேசிய மொழிப் பிரிவு**
5. **இலங்கை தேசிய மனித வள அபிவிருத்தி சபை**


2021 இன் குறிப்பிடத்தக்க நிகழ்வுகள்

2021 ஆம் ஆண்டில் இடம்பெற்ற முக்கிய நிகழ்வுகள்


இவ் அமைச்சானது 2020 ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 09 ஆம் திகதியிலிருந்து அரச சேவைகள், மாகாண சபை கள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சு என்னும் பெயரின் கீழ் கௌரவ. ஜனக பண்டார தென்னகோன் அவர்களின் தலைமையின் கீழ் வந்துள்ளது. அத்துடன் இவ்வமைச்சின் இராஜாங்க அமைச்சாக மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி செயற்பட்டு வருகின்றது.

- *ஆட்சேர்ப்புக்கள்*

நாடளாவிய சேவைகளில் நிலவுகின்ற வெற்றிடங்களை நிரப்புவதற்காக 2021 ஆம் ஆண்டில் 610 உத்தியோகத்தர்கள் அரச சேவையினுள் இணைத்துக் கொள்ளப்பட்டார்கள்.



இணைந்த சேவைகளில் நிலவுகின்ற வெற்றிடங்களை நிரப்புவதற்காக 2021 ஆம் ஆண்டில் 67071 உத்தியோகத்தர்கள் அரச சேவையினுள் இணைத்துக் கொள்ளப்பட்டார்கள்.



- ***2021 திசெம்பர் மாதம் 31 ஆந் திகதியன்று நாடளாவிய சேவையின் உத்தியோகத்தர்கள்.***

இலங்கை நிர்வாக சேவை

தரம்	அங்கீகரிக்கப்பட்ட பதவிகள்	உண்மையான உத்தியோகத்தர்களின் எண்ணிக்கை	வெற்றிடங்கள்	மேலதிகமானவர்கள்
விசேட	395	354	41	-
I	981	646	335	-
II/III	1874	1590	284	-
மொத்தம்	3223	2590	660	-

இலங்கை கணக்காளர் சேவை

தரம்	அங்கீகரிக்கப்பட்ட பதவிகள்	உண்மையான உத்தியோகத்தர்களின் எண்ணிக்கை	வெற்றிடங்கள்	மேலதிகமானவர்கள்
விசேட	80	0	80	-
I	489	635	-	146
II/III	1520	1049	471	-
மொத்தம்	2089	1684	551	146

இலங்கை பொறியியலாளர் சேவை

தரம்	அங்கீகரிக்கப்பட்ட பதவிகள்	உண்மையான உத்தியோகத்தர்களின் எண்ணிக்கை	வெற்றிடங்கள்	மேலதிகமானவர்கள்
விசேட	55	48	07	-
I	275	275	-	-
II	47	247	-	200
III	1146	761	385	-
மொத்தம்	1523	1331	392	200

இலங்கை திட்டமிடல் சேவை

தரம்	அங்கீகரிக்கப்பட்ட பதவிகள்	உண்மையான உத்தியோகத்தர்களின் எண்ணிக்கை	வெற்றிடங்கள்	மேலதிகமானவர்கள்
விசேட	76	59	17	-
I	190	116	74	-
II/III	803	669	134	-
III	258	258	-	-
மொத்தம்	1327	1102	225	-

இலங்கை கட்டிடக் கலைஞர் சேவை

தரம்	அங்கீகரிக்கப்பட்ட பதவிகள்	உண்மையான உத்தியோகத்தர்களின் எண்ணிக்கை	வெற்றிடங்கள்	மேலதிகமானவர்கள்
விசேட	01	01	-	-
I	06	04	02	-
II/III	69	38	31	-
மொத்தம்	76	43	33	-

இலங்கை விஞ்ஞான சேவை

தரம்	அங்கீகரிக்கப்பட்ட பதவிகள்	உண்மையான பதவியணி	வெற்றிடங்கள்	மேலதிகமானவர்கள்
விசேட	18	12	6	-
I	52	29	23	-
II	19	-	19	-
,II/III	563	439	124	-
III	8	2	6	
மொத்தம்	601	433	168	-

- 2021 திசெம்பர் மாதம் 31 ஆந் திகதியன்று இணைந்த சேவையின் உத்தியோகத்தர்கள்.

சேவை	அங்கீகரிக்கப்பட்ட	சேவையில் உள்ளவர்கள்	வெற்றிடங்கள்
அரச முகாமைத்துவ சேவை	29785	24695	5090
மொழிபெயர்ப்பாளர் சேவை	636	253	383
நூலகர் சேவை	625	124	502
அலுவலக உதவியாளர் சேவை		16809	2092
சாரதிச் சேவை		8490	
தகவல் மற்றும் தொடர்பாடல் தொழில்நுட்ப சேவை	3022	1744	1578
அபிவிருத்தி உத்தியோகத்தர் சேவை	64888	64888	
மொத்தம்	98956	117003	9445

- அமைச்சு, திணைக்களம், மாவட்டசெயலகம், பிரதேச செயலகம், ஆகியவற்றில் இது வரை அறிக்கையிடப்பட்டுள்ள அங்கீரிக்கப்பட்டசேவையில் உள்ளவர்களின் எண்ணிக்கை

2021 ஆம் ஆண்டில் வெளியிடப்பட்ட அரசாங்க நிர்வாகச் சுற்றறிக்கைகளின் பட்டியல்

	சுற்றறிக்கை இல	வெளியிடப் பட்ட திகதி	விடயம்	குறிப்பு
01	01/2021	2021.02.24	தாபன விதிக்கோவையின் ஏற்பாடுகளை மீளமைத்து வெளியிடப்பட்ட அரசாங்க நிர்வாகச் சுற்றறிக்கைகள் - 2020	-
02	02/2021	2021.03.05	அரச சேவையைத் தடையின்றி நடாத்திச் செல்லல்	அரசாங்க நிருவாகச் சுற்றறிக்கை 20/2020 மற்றும் சனாதிபதியின் செயலாளரால் வெளியிடப்பட்ட 2020.04.18 ஆந் திகதியிடப்பட்ட இலக்கம் PS/GPA/චක්‍ර/20/2020 சுற்றறிக்கை, 2020.05.14 ஆந் திகதியிடப்பட்ட இலக்கம் PS/GPA/චක්‍ර/21/2020 சுற்றறிக்கை மற்றும் 2020.10.29 ஆந் திகதிய இலக்கம் PS/GPA චක්‍ර/33/2020 சுற்றறிக்கை
	சுற்றறிக்கை இல	**வெளியிடப் பட்ட திகதி**	**விடயம்**	**குறிப்பு**
03	03/2021	2021.12.23	பொதுச் சேவை ஆணைக்குழுவின் சுற்றறிக்கை 04/2020 இன் படி மாகாண அபிவிருத்தி உத்தியோகத்தர் சேவைகளின் கீழ் மாகாண பொதுச் சேவையில் நியமிக்கப்பட்டுள்ள உத்தியோகத்தர்களின் கோரிக்கைகளின்படி இணைந்த சேவையின் கீழ் அபிவிருத்தி உத்தியோகத்தர் சேவையில் உள்ள பதவியொன்றுக்கு இடமாற்றம் செய்தல்	பொதுச் சேவை ஆணைக்குழுவின் சுற்றறிக்கை 04/2020
04	04/2021	2021.03.19	மொழிபெயர்ப்பாளர் குழாத்தை நிறுவுதல்	-
05	06/2021	2021.04.09	2021 றமழான் (ராமசான்)	-

			காலத்தில் விசேட விடுமுறை	
06	07/2021	2021.04.09	திறமை அடிப்படையில் முகாமைத்துவ சேவை உத்தியோகத்தர் சேவையின் அதிவிசேட தரத்திற்கு பதவியுயர்த்துவதற்கான போட்டிப் பரீட்சை – 2019 (2020)	-
07	08/2021	2021.05.18	அரசாங்க அலுவலகங்களுக்கு 02 நாட்களை விசேட லீவாக பிரகடனப்படுத்தல்	-
08	09/2021	2021.05.21	பட்டதாரி பயிலுநர்களுக்கு லீவு வழங்குதல்	-
09	10/2021	2021.06.07	அரசாங்க கட்டிடங்கள் மற்றும் வீடுகளிலிருந்தான வாடகை வருமானம், 20.02.01.01 என்னும் வருமானக் குறியீட்டிற்கான 2022 ஆம் ஆண்டிற்கான வருமான மதீப்பீடு	அரசிறைக் கொள்கைச் சுற்றறிக்கையின் 01/2015
10	11/2021	2021.06.07	அரசாங்க கட்டிடங்களின் மற்றும் வீடுகளிலிருந்தான வாடகை "20.02.01.01" தொடர்பான வருமான நிலுவை அறிக்கை சமர்ப்பித்தல் – 2021.06.30	அரசிறைக் கொள்கைச் சுற்றறிக்கையின் 01/2015

	சுற்றறிக்கை இல	வெளியிடப் பட்ட திகதி	விடயம்	குறிப்பு
11	12/2021	2021.06.25	உள்ளூராட்சி சபைத் தேர்தலில் வெற்றியீட்டியதன் பின்னர் அந்நிறுவனங்களில் மாநகர முதல்வர்/ தலைவர், பிரதி மாநகர முதல்வர்/ உப தலைவர்/ நகரசபை உறுப்பினர்/ பிரதேச சபை உறுப்பினர் ஆகத் தெரிவு செய்யப்பட்டுள்ள அரசியல் உரிமைகள் உரித்துடைய அலுவலர்களுக்கு வழங்கப்பட்டுள்ள கடமை லீவுகளுக்கான திருத்தம்.	அரசாங்க நிருவாகச் சுற்றறிக்கை 13/2007 அரசாங்க நிருவாகச் சுற்றறிக்கை 32/91(III)
12	13/2021	2021.07.06	முன்னாள் படைச் சேவையாளர்களை நியமிக்கும் போது ஏற்புடையதாகும் சம்பளத்தைத் தீர்மானித்தல்	தாபனவிதிக் கோவையின் I ஆம் தொகுதியின் VII ஆம் அத்தியாயத்தின் 8 ஆம் பிரிவு
13	14/2021	2021.06.30	தேசிய விளையாட்டு தினத்தைப் பிரகடனப்படுத்தல்	அரசாங்க நிருவாகச் சுற்றறிக்கை 06/2020

14	15/2021	2021.09.15	2020 பாராளுமன்றத் தேர்தலில் போட்டியிட்ட அரசியல் உரிமை அனுபவிக்க உரித்துடைய அரச ஊழியர்களுக்கு சம்பளம் வழங்குதல்	தாபன விதிக்கோவையின் XXXII ஆம் அத்தியாயத்தின் 2:3:2 உப பிரிவு
15	16/2021	2021.09.13	இலங்கை நிர்வாக சேவையின் விசேட தரத்திலுள்ள அலுவலர்களுக்கான வருடாந்த இடமாற்ற நடைமுறைகள்	அரசாங்க சேவை ஆணைக்குழுவின் இலக்கம் 1589/30 மற்றும் 2009.02.20 திகதியிடப்பட்ட அதிவிசேட வர்த்தமானியின் செயலொழுக்கு விதிகளின் I ஆம் பாகத்தின் XVIII ஆம் ஒழுங்கு விதி 202
16	17/2021	2021.09.13	இலங்கை நிர்வாக சேவை உத்தியோகத்தர்களுக்கான வருடாந்த இடமாற்ற நடைமுறைகள் *(I, II மற்றும் III ஆந் தரங்கள்)*	අමස/11/1090/523/087 மற்றும் 2011.05.11 திகதியிடப்பட்ட අමස/14/0286/523/007 மற்றும் 2014.04.03 திகதியிடப்பட்ட அமைச்சரவை தீர்மானம்
	சுற்றறிக்கை இல	**வெளியிடப் பட்ட திகதி**	**விடயம்**	**குறிப்பு**
17	18/2021	2021.09.13	இலங்கை திட்டமிடல் சேவை அலுவலர்களின் வருடாந்த இடமாற்றம் - 2022	-
18	19/2021	2021.09.13	இலங்கை கணக்காளர் சேவை அலுவலர்களின் வருடாந்த இடமாற்ற நடைமுறைகள் – 2022	-
19	20/2021	2021.10.06	அரசாங்கத்தின் வருமானங்ளை மதிப்பிடுதல், சேகரித்தல், மேற்பார்வை செய்தல் மற்றும் அறிக்கைப்படுத்துதல் தொடர்பான வழிகாட்டல்கள் (அரசாங்க கட்டட மற்றும் வீட்டு வாடகைகள் – 20.02.01.01)	நிதிப்பிரமாணம் 127(6) நிதிப்பிரமாணம் 128(2)உ
20	21/2021	2021.10.08	அரசாங்க முகாமைத்துவ உதவியாளர் சேவையின் சிறப்பு வகுப்பிலுள்ள அலுவலர்களுக்கான வருடாந்த இடமாற்றம் - 2022	அரசாங்க சேவைகள் ஆணைக்குழுவின் இலக்கம் 1589/30 மற்றும் 2009.02.20 திகதியிடப்பட்ட அதிவிசேட

				வர்த்தமானியின் பிரசுரிக்கப்பட்ட செயற்திட்ட விதிகளின் I ஆம் தொகுப்பின் XVIII ஆம் அத்தியாயத்தின் ஏற்பாடுகள்
21	22/2021	2021.11.22	அரசாங்க சேவையின் மற்றும் மாகாண அரசாங்க சேவையின் பதவிநிலை அலுவலர்கள் மற்றும் பதவிநிலையல்லாத அலுவலர்களை வகைப்படுத்தல்	அரசாங்க நிர்வாகச் சுற்றறிக்கை 03/2016 அரசாங்க நிர்வாகச் சுற்றறிக்கை 32/2017
22	23/2021	2021.11.05	அரச நிறுவனங்களில் உள்ள உத்தியோகத்தர்கள் மற்றும் அவர்களின் குடும்ப அங்கத்தவர்களின் தரவுகளை "ஈ– கிராம உத்தியோகத்தர்" முறைமையில் சேர்த்தல்	-

அரசாங்க நிர்வாகச் சுற்றறிக்கைக் கடிதங்கள்

சுற்றறிக்கை இல	வெளியிடப்பட்ட திகதி	விடயம்	குறிப்பு	சுற்றறிக்கை இல
23	24/2021	2021.12.02	அரசாங்க கட்டிடங்களின் மற்றும் வீடுகளிலிருந்தான வாடகை "20.02.01.01" தொடர்பான வருமான நிலுவை அறிக்கை சமர்ப்பித்தல் – 2021.12.31	அரசாங்க நிதிக் கொள்கை சுற்றிக்கை 01/2015
24	25/2021	2021.12.20	2022 ஆம் ஆண்டின் கடமைச் செயற்பாடுகளை ஆரம்பித்தல்	-
25	26/2021	2021.12.24	அரசாங்க அலுவலர்களுக்கான விஷேட முற்பணம் – 2022 ஆம் ஆண்டு	அரசாங்க நிர்வாகச் சுற்றறிக்கை 26/2015

திருத்தப்பட்ட அரசாங்க நிர்வாக சுற்றறிக்கைகள்

	சுற்றறிக்கை இல	வெளியிடப் பட்ட திகதி	விடயம்	குறிப்பு
26	12/2005(VIII)	2021.10.29	ஓய்வு பெற்ற அரச உத்தியோகத்தர்களுக்காக நடைமுறைப்படுத்தப்படும் அக்ரஹார காப்புறுதித் திட்டத்தின் கீழ் உள்ள நலன்களை தொடர்ந்தும் விரிவுபடுத்தல்	அரசாங்க நிர்வாகச் சுற்றறிக்கை 12/2005(VI) அரசாங்க நிர்வாகச் சுற்றறிக்கை 12/2005(VII)
27	12/2005(IX)	2021.11.09	ஓய்வு பெற்ற அரச உத்தியோகத்தர்களுக்காக நடைமுறைப்படுத்தப்படும் அக்ரஹார காப்புறுதித் திட்டத்தின் கீழ் உள்ள நலன்களை மேலும் விரிவுபடுத்தல்	அரசாங்க நிர்வாகச் சுற்றறிக்கை 12/2005(VIII)
28	13/2008(VI)	2021.12.29	உத்தியோகபூர்வ வாகனங்களுக்கான எரிபொருள் வழங்குதலும், அவ் வாகனச் சாரதிகளுக்கான மேலதிக நேர மற்றும் இணைந்த படிகளை செலுத்தலும்	அரசாங்க நிர்வாகச் சுற்றறிக்கை 13/2008(V)
29	08/2010(I)	2021.12.29	அரச செலவுகள் முகாமைத்துவம்	அரசாங்க நிர்வாகச் சுற்றறிக்கை 08/2010

	சுற்றறிக்கை இல	வெளியிடப் பட்ட திகதி	விடயம்	குறிப்பு
30	07/2017(I)	2021.02.05	மகப்பேறின்மைக்கான சிகிச்சைகளைப் பெற்றுக் கொள்ள அவசியப்படும் அரச அலுவலர்களுக்கு சம்பளமற்ற விடுமுறை வழங்குதல்	அரசாங்க நிர்வாகச் சுற்றறிக்கை 07/2017
31	26/2017(V)	2021.02.10	விதவைகள்/ தபுதாரர்கள் மற்றும் அநாதைகள் ஓய்வூதியத் திட்டத்திற்கான பழைய இலக்கம்: *82/83* மற்றும் M/F வகுதியின் கீழ் பதிவு செய்யப்பட்டுள்ள பழைய அங்கத்தவர்களை இணைய வழியில் (Online) மீண்டும் பதிவு செய்தல்	அரசாங்க நிருவாகச் சுற்றறிக்கை 26/2017 அரசாங்க நிருவாகச் சுற்றறிக்கை 26/2017(I) அரசாங்க நிருவாகச் சுற்றறிக்கை 26/2017(II) அரசாங்க நிருவாகச் சுற்றறிக்கை 26/2017(III) அரசாங்க நிருவாகச் சுற்றறிக்கை 26/2017(IV)
32	26/2017(VI)	2021.08.05	விதவைகள்/ தபுதாரர்கள் மற்றும் அநாதைகள்	அரசாங்க நிர்வாகச் சுற்றறிக்கைகள் 26/2017

			ஓய்வூதியத் திட்டத்திற்கான பழைய இலக்கம்: 82/83 மற்றும் M/F வகுதியின் கீழ் பதிவுசெய்யப்பட்டுள்ள பழைய அங்கத்தவர்ளை இணைய வழியில் (Online) மீண்டும் பதிவுசெய்தல்	அரசாங்க நிர்வாகச் சுற்றறிக்கைகள் 26/2017(I) அரசாங்க நிர்வாகச் சுற்றறிக்கைகள் 26/2017(II) அரசாங்க நிர்வாகச் சுற்றறிக்கைகள் 26/2017(III) அரசாங்க நிர்வாகச் சுற்றறிக்கைகள் 26/2017(IV)
33	26/2017(VII)	2021.08.10	விதவைகள்/ தபுதாரர்கள், அநாதைகள் ஓய்வூதியத் திட்டங்களுக்கு பழைய இல: 82/83 மற்றும் M/F வகுதிகளின் கீழ் பதிவு செய்த பழைய அங்கத்தவர்ளை, இணைய வழித்திட்டத்தின் கீழ் மீண்டும் பதிவு செய்தல்	அரசாங்க நிர்வாகச் சுற்றறிக்கை 26/2017 அரசாங்க நிர்வாகச் சுற்றறிக்கை 26/2017(I), அரசாங்க நிர்வாகச் சுற்றறிக்கை 26/2017(II), அரசாங்க நிர்வாகச் சுற்றறிக்கை 26/2017(III), அரசாங்க நிர்வாகச் சுற்றறிக்கை 26/2017(IV), அரசாங்க நிர்வாகச் சுற்றறிக்கை 26/2017(V) மற்றும் அரசாங்க நிர்வாகச் சுற்றறிக்கை 26/2017(VI)

	சுற்றறிக்கை இல	**வெளியிடப் பட்ட திகதி**	**விடயம்**	**குறிப்பு**
34	03/2019(II)	2021.02.16	தாபனவிதிக் கோவையின் தொகுதி II இன் XLVIII ஆம் அத்தியாயத்தின் 19:5 ஆம் பிரிவின் கீழான ஒழுக்காற்று விசாரணை உத்தியோகத்தர்களின் பெயர்ப் பட்டியல்	அரசாங்க நிருவாகச் சுற்றறிக்கை 03/2019 அரசாங்க நிருவாகச் சுற்றறிக்கை 03/2019(I)
35	02/2021(I)	2021.04.27	அரச சேவையைத் தடையின்றி நடாத்திச் செல்லல்	அரசாங்க நிருவாகச் சுற்றறிக்கை 02/2021
36	02/2021(II)	2021.05.10	அரச சேவையைத் தடையின்றி நடாத்திச் செல்லல்	அரசாங்க நிருவாகச் சுற்றறிக்கை 02/2021 மற்றும் அரசாங்க நிருவாகச் சுற்றறிக்கை 02/2021(I)

37	02/2021(III)	2021.07.30	அரசாங்க சேவையை வழமையான முறையில் கொண்டு நடாத்துதல்	சனாதிபதி செயலாளர் PS/RD-A1/07/06/02 ஆம் இலக்க 2021.07.29 ஆம் திகதிய கடிதம்
38	02/2021(IV)	2021.08.06	அரசாங்க சேவையை வழமைபோன்று கொண்டு நடாத்துதல்	அரசாங்க நிருவாகச் சுற்றறிக்கை 02/2021(III)
39	02/2021(V)	2021.10.01	அரசாங்க சேவையை வழமைபோன்று கொண்டு நடாத்துதல்	அரசாங்க நிருவாகச் சுற்றறிக்கை 02/2021(III) மற்றும் அரசாங்க நிருவாகச் சுற்றறிக்கை 02/2021(IV)
40	02/2021(VI)	2021.12.30	அரசாங்க சேவையை வழமைபோன்று கொண்டு நடாத்துதல்	அரசாங்க நிருவாகச் சுற்றறிக்கை 02/2021(V)
41	07/2021(I)	2021.05.06	திறமை அடிப்படையில் முகாமைத்துவ சேவை உத்தியோகத்தர் சேவையின் அதிவிசேட தரத்திற்கு பதவியுயர்த்துவதற்கான போட்டிப்பரீட்சை – 2019 (2020)	அரசாங்க நிர்வாகச் சுற்றறிக்கை 07/2021
42	07/2021(II)	2021.06.22	திறமை அடிப்படையில் முகாமைத்துவ சேவை உத்தியோகத்தர் சேவையின் அதிவிசேட தரத்திற்கு பதவியுயர்த்துவதற்கான போட்டிப் பரீட்சை– 2019 (2020)	அரசாங்க நிர்வாகச் சுற்றறிக்கை 07/2021(I)

<u>அரசாங்க நிர்வாகச் சுற்றறிக்கைக் கடிதங்கள்</u>

	சுற்றறிக்கை கடித இல	வெளியிடப் பட்ட திகதி	விடயம்	குறிப்பு
43	01/2021	2021.04.27	அரசகருமம் மொழிக் கொள்கையை நடைமுறைப்படுத்துதல்	அரசாங்க நிருவாகச் சுற்றறிக்கை 18/2020
44	02/2021	2021.10.22	கொவிட் -19 நோய்த் தொற்றுக்குள்ளான அரச உத்தியோகத்தர்களுக்காக அக்ரஹார காப்புறுதித் திட்டத்தின் கீழ் நலன்களை வழங்குதல்	-

தகவல் தொழில்நுட்பப் பிரிவ

- ***நிகழ்நிலை (Online) முறைமை மூலம் பயிற்சி திட்டங்களை நடத்துதல் மற்றும் வசதிகளை வழங்குதல்.***

இதற்கு முன்னர் அமைச்சின் ஊழியர்களுக்கு தகவல் தொழில்நுட்பப் பிரிவில் பயிற்சி நிகழ்ச்சிகள் நடத்துதல் மற்றும் ஏனைய பயிற்சித் திட்டங்களுக்கு வசதிகள் வழங்கப்பட்டன. தற்போதுள்ள கோவிட் 19 நிலையுடன் இத்தகைய வசதிகளை வழங்குவதற்கான சவாலை வெற்றிகொள்ள, நிகழ்நிலை பயிற்சி நிகழ்ச்சிகளை நடத்துவதற்கு தேவையான மென்பொருள் மற்றும் உபகரணங்களை கொள்வனவு செய்ய நடவடிக்கை எடுக்கப்பட்டது. அதன்படி, நிகழ்நிலை தொழில்நுட்பம் மூலம் சூம் மென்பொருள் மூலம் தகவல் தொழில்நுட்பப் பயிற்சித் திட்டங்கள் மற்றும் ஏனைய பயிற்சித் திட்டங்களை நடத்துவதற்கான வசதிகள் வழங்கப்பட்டன.

மேலும் அமைச்சின் உள்ளக உத்தியோகத்தர்களுக்கான பயிற்சி நிகழ்ச்சிகளை நடாத்துவதற்கு மேலதிகமாக பின்வரும் பணிகளுக்கான வசதிகளும் வழங்கப்பட்டன.

  - அமைச்சுக்கு வெளியே உள்ள நிறுவனங்களில் பணிபுரியும் அதிகாரிகளுக்கு அறிவைப் பரப்புவதற்கான நிகழ்நிலை பயிற்சித் திட்டங்களை நடத்துவதற்கு உதவி வழங்குதல்.

  - அமைச்சின் பல்வேறு பிரிவுகள் தொடர்பான பல்வேறு நிகழ்ச்சிகள், பயிற்சி அமர்வுகள் மற்றும் கூட்டங்களை நிகழ்நிலையில் நடத்துவதற்கு தேவையான வசதிகள் மற்றும் ஒருங்கிணைப்பு நடவடிக்கைகளை வழங்குதல்.

- ***கணினி முறைமைகள் தொழிற்பாட்டுப் பிரிவை பராமரித்தல்***
- ***அமைச்சின் உத்தியோகபூர்வ இணையத்தளத்தின் பாதுகாப்பு மற்றும் ஏனைய தரநிலைகளை மேம்படுத்துதல்***
- ***கணக்கு பிரிவின் தேவைகளுக்கு ஏற்ப புதிய முறைமையை வடிவமைத்தல்***
- ***அமைச்சு தபாலுக்கான புதிய மென்பொருள் முறைமையை வடிவமைத்தல் (கட்டம் 1)***
- ***பன்முகப்படுத்தப்பட்ட போட்டோ பிரதி இயந்திரத்தை நிறுவுதல்.***
- ***அமைச்சின் அன்றாட கடமைகளுக்கு உதவுதல்.***

வருடாந்த செயலாற்றுகை அறிக்கை

2021-ம் ஆண்டு மேற்கொள்ளப்பட்ட பணிகள்		**எண்ணிக்கை**
2021.12.31 அன்று இலங்கை பொறியியல் சேவை உத்தியோகத்தர்கள் பற்றிய தகவல்கள்		
அங்கீகரிக்கப்பட்ட எண்ணிக்கை		1520
உண்மையான எண்ணிக்கை		1332
புதிதாக ஆட்சேர்ப்பு செய்யப்பட்டவர்களின் எண்ணிக்கை	திறந்த அடிப்படையில்	211
	மட்டுப்படுத்தப்பட்ட அடிப்படையில்	31
ஏனைய செயற்பாடுகள்		
நிரந்தரமாக்குதல்		35
தரம் III இல் இருந்து தரம் II இற்கு		102
தரம் II இல் இருந்து தரம் I இற்கு		16
தரம் I இல் இருந்து விசேட /அதிவிசேட தரத்திற்கு		23
ஓய்வு பெறுதல்		27
வருடாந்தம் அல்லாத இடமாற்றங்கள்		54
ஒழுக்காற்று நடவடிக்கைகள்		
ஆரம்பிக்கப்பட்டுள்ள ஒழுக்காற்று நடவடிக்கைகளின் எண்ணிக்கை		12
குற்றப் பத்திரம் வழங்குதல் / விளக்கம் கோருதல்		04
ஒழுக்காற்று உத்தரவை வழங்குதல்		03
சேவையை விட்டுச் சென்ற அறிவித்தல்களுக்கு எதிராக செய்யப்படும் மேன்முறையீடுகள்		00

அரச உத்தியோகத்தர்களின் கட்டாய ஓய்வுபெறச்செய்யும் வயதை நீடிப்பது தொடர்பான கலந்துரையாடல்






பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்களை ஏற்பாடு செய்தல்.

விதவைகள் அனாதைகள் ஓய்வூதியம்தொடர்பாக பொது நிர்வாக அமைச்சின் ஊழியர்களுக்காக ஓய்வூதிய திணைக்களத்தின் வளவாளர்களைக் கொண்டு சுகாதார வழிகாட்டல்களை பேணி பயிற்சி நிகழ்ச்சித்திட்டமொன்று நடத்தப்பட்டது.





திறந்த ஆட்சேர்ப்பு

- *பொறியியல் துறை பட்டதாரிகளை இலங்கை பொறியியல் சேவையில் திறந்த அடிப்படையில் ஆட்சேர்ப்பு செய்வதற்கான தகுதிகளை பரீட்சிக்கும் நேர்முகப் பரீட்சை 2021.04.03,04 மற்றும் 05 ஆகிய திகதிகளில் இடம்பெற்றதுடன், வெற்றிடங்களின் எண்ணிக்கைக்கு ஏற்ப 211 புதிய உத்தியோகத்தர்கள் 2021.07.12 ஆந் திகதி முதல் அமுலுக்கு வரும் வகையில் இலங்கை பொறியியல் சேவையில் தரம் III க்கு நியமனம் வழங்கப்பட்டது.*





மட்டுப்படுத்தப்பட்ட ஆட்சேர்ப்பு

- இலங்கை தொழிநுட்ப சேவை உத்தியோகத்தர்களை மட்டுப்படுத்தப்பட்ட அடிப்படையில் இலங்கை பொறியியல் சேவைக்கு ஆட்சேர்ப்பு செய்வதற்கான முறையான நேர்முகப் பரீட்சை 2021.02.26 ஆந் திகதி இடம்பெற்றதுடன் வெற்றிடங்களின் எண்ணிக்கையின்படி தற்போது 31 உத்தியோகத்தர்களுக்கு 2021.02.26 ஆந் திகதி முதல் அமுலுக்கு வரும் வகையில் இலங்கை பொறியியல் சேவையில் தரம் III க்கு நியமனம் வழங்கப்பட்டது.





விசேட தரத்திற்கு பதவி உயர்வு

- இலங்கை பொறியியல் சேவையின் தரம் I இல் உள்ள தகைமை பெற்ற உத்தியோகத்தர்களை அச்சேவையின் விசேட தரத்திற்கு தரம் உயர்த்துவதற்கான முறையான நேர்முகப் பரீட்சை 2021.01.16 மற்றும் 17 ஆம் திகதிகளில் இடம்பெற்றதுடன், வெற்றிடங்களின் எண்ணிக்கைக்கு ஏற்ப 23 உத்தியோகத்தர்கள் 2021.01.17 ஆந் திகதி அமுலுக்கு வரும் வகையில் இலங்கை பொறியியல் சேவையில் தரம் விசேட தரத்திற்கு தரம் உயர்த்தப்பட்டனர்.
- இலங்கை பொறியியல் சேவையில் 2021.06.30 ஆந் திகதி அன்று இருந்த விசேட தரத்தின் 23 வெற்றிடங்களுக்கு 2021.09.17 ஆந் திகதி விண்ணப்பங்கள் கோரப்பட்டு, 2021.11.06 ஆந் திகதி நேர்முகப் பரீட்சை நடத்தப்பட்டு நேர்முகப் பரீட்சை அட்டவணைகள், உரிய அவதானிப்புகள் மற்றும் பரிந்துரைகளுடன் 2021.11.11 ஆந் திகதி பொதுச் சேவை ஆணைக்குழுவிற்கு அனுப்பப்பட்டன.





ஆரம்ப பயிற்சி பாடநெறி

- புதிய உத்தியோகத்தர்களுக்கான சேவை ஆரம்பப் பயிற்சி இலங்கை அபிவிருத்தி நிர்வாக நிறுவனத்தினால் 04 குழுக்களின் கீழ் ஏற்பாடு செய்யப்பட்டு 03 குழுக்களுக்கு ஆரம்பப் பயிற்சிகள் வழங்கப்பட்டன.

இரண்டாம் அரச மொழி தேர்ச்சிக்கான பாடநெறி

- இலங்கை பொறியியல் சேவை உத்தியோகத்தர்களுக்கு இரண்டாம் மொழித் தேர்ச்சியைப் பெற்றுக்கொள்வது தொடர்பில் தேசிய மொழிகள், கல்வி மற்றும் பயிற்சி நிறுவகத்துடன் இணைந்து 11 உத்தியோகத்தர்களுக்கு தமிழ் மொழிப் பயிற்சி நிகழ்ச்சிகள் 2021.11.16 முதல் 2021.11.27வரை நடத்தப்பட்டது.



- மருத்துவ உத்தியோகத்தர்கள், பல் மருத்துவர்கள் மற்றும் தாதி உத்தியோகத்தர்களின் கட்டாய ஓய்வு வயது 63 ஆக நீட்டிக்கப்பட்டமை.

தற்போதிருக்கும் கொவிட் 19 தொற்று நிலைமை காரணமாக வைத்திய உத்தியோகத்தர்கள் மற்றும் தாதியர்களின் சேவை அவசியமானதனால், அரச சேவையில் உள்ள அனைத்து தரத்திலான மருத்துவ அதிகாரிகள், பல் மருத்துவ அதிகாரிகள் மற்றும் தாதியர்களின் கட்டாய ஓய்வு வயதை 63 ஆக அதிகரிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

- முப்படையினருக்கு ஓய்வூதியம் வழங்கும் முறையை எளிதாக்குதல்

- 10/2021 ஆம் இலக்க ஓய்வூதிய அறிவுறுத்தல்கள் ஆவணத்தின் மூலம் 10/12 ஆண்டுகளுக்கு மேற்பட்ட சேவை காலத்திற்கான சேவை ஓய்வூதியம் மற்றும் ஊனமுற்றோர் ஓய்வூதியம் ஆகிய இரண்டிற்கும் தகுதியுடைய ஆயுதப்படை உறுப்பினர்களின் விண்ணப்பங்களை

நிகழ்நிலை முறை (PMS) ஊடாக சமர்ப்பிக்க தேவையான வசதிகளை வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

- ஊனமுற்றோர் சேவை ஓய்வூதியங்கள், இழப்பீடுகள் மற்றும் கொடுப்பனவுகள் பெறும் உத்தியோகத்தர்களின் ஓய்வூதிய வயது 55 இல் திருத்தப்பட்ட சேவை ஓய்வூதிய இலக்கத்திலேயே திருத்தப்பட்ட சம்பளத்தை வழங்குவதை இந்த திணைக்களத்திலேயே மேற்கொள்வதற்காக 10/2021 ஆம் இலக்க ஓய்வூதிய அறிவுறுத்தல்கள் ஆவணத்தின் மூலம் தேவையான வசதிகள் செய்யப்பட்டுள்ளன.

- முப்படையினருக்கான இறப்பு பணிக்கொடையை முறைப்படுத்தவும், விரைவுபடுத்தவும், 2021.11.15 ஆந் திகதி முதல் இறப்பு பணிக்கொடை விண்ணப்பங்களை நிகழ்நிலையில் சமர்ப்பிக்க ஓய்வூதிய சுற்றறிக்கை இல 09/2015 (IV) மூலம் தேவையான வசதிகள் செய்யப்பட்டுள்ளன.

- விரல்ரேகை பதிவு மூலம் வருடாந்த வாழ்க்கைச் சான்றிதழ் வழங்கும் செயன்முறையை மேலும் வலுப்படுத்தல்.
  - 2021.02.01 ஆந் திகதி வெளியிடப்பட்ட ஓய்வூதியச் சுற்றறிக்கை 02/2020 (திருத்தம் V) மூலம் விரல்ரேகை பதிவு மூலம் வருடாந்த வாழ்க்கைச் சான்றிதழ் வழங்கும் நிகழ்ச்சித் திட்டத்தின் நான்காவது கட்டத் திட்டத்தின் கீழ், 20 பிரதேச அபிவிருத்தி வங்கிக் கிளைகள் மூலம் ஓய்வூதியதாரர்களுக்கு இந்த வசதிகளை வழங்க ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.



மாத்தறையில் இடம்பெற்ற அங்குரார்ப்பண நிகழ்வு

  - 2021.11.10 ஆந் திகதிய ஓய்வூதியச் சுற்றறிக்கை 02/2020 (திருத்தம் VI) மூலம் 125 மக்கள் வங்கிக் கிளைகளுக்கு இந்த வசதியை மேலும் விரிவுபடுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.
- தனியார் பாடசாலைகள் மற்றும் பிரிவேனா ஆசிரியர் ஓய்வூதியத்தை பரவலாக்குதல்.
- கருணையின் அடிப்படையில் வழங்கப்படும் பணிக்கொடை கொடுப்பனவை ரூ.50,000 ஆக அதிகரித்தல்.
- போரில் உயிரிழந்த வீரர்களின் குடும்பங்களுக்கான விசேட நன்மைகள் .
- விதவைகள், அனாதைகள் உறுப்புரிமையை இற்றைப்படுத்தல்..
- முப்படையினருக்கான ஓய்வூதியம் வழங்கும் முறையை எளிதாக்குதல் வேண்டும்.
- ஓய்வூதிய விண்ணப்பங்களின் முகாமைத்துவத்தை முழுமையான நிகழ்நிலை முறைமைக்கு மாற்றுதல்.
- கொவிட் நிலைமைகளின் கீழ் ஓய்வூதியதாரர்களை பாதுகாத்தல்

அரசுக்கு வருமானம் ஈட்டிக்கொடுத்தல்

தற்போது இத்திணைக்களத்திற்கு ஜனவரி முதல் டிசம்பர் வரை குத்தகைக்கு விடப்பட்டுள்ள கட்டிடங்களுக்கு கட்டிட வாடகையாக 25,891,740 ரூபாயும், விடுமுறை விடுதிகள் மூலம் 169,555 ரூபாயும் அரசாங்க வருமானமாக ஈட்டப்பட்டுள்ளது.

இலங்கை நிர்வாக சேவையின் தரம்

(i) இலங்கை நிர்வாக சேவையின் தரம் III உத்தியோகத்தர்களில் 166 உத்தியோகத்தர்களை தரம் II க்கு தரம் உயர்த்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டதுடன், 50 உத்தியோகத்தர்களின் விண்ணப்பங்கள் சிபாரிசு செய்யப்பட்டு பொதுச் சேவை ஆணைக்குழுவிற்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளன.

(ii) இலங்கை நிர்வாக சேவையின் தரம் II இல் உள்ள 79 உத்தியோகத்தர்களை தரம் I க்கு தரம் உயர்த்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டதுடன், மேலும் 04 உத்தியோகத்தர்களின் விண்ணப்பங்கள் பரிந்துரைக்கப்பட்டு பொதுச் சேவை ஆணைக்குழுவிற்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளன.

(iii) இலங்கை நிர்வாக சேவையின் தரம் I உத்தியோகத்தர்களில் 30 உத்தியோகத்தர்கள் 2021.01.01 ஆந் திகதிக்கு விசேட தரத்திற்கு தரம் உயர்த்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டதுடன், மேலும் 2021.07.01 ஆந் திகதிக்கு விசேட தரத்திற்கு தரம் உயர்த்துவதற்காக 19 பேரின் விண்ணப்பங்கள் பரிந்துரைக்கப்பட்டு பொதுச் சேவை ஆணைக்குழுவிடம் சமர்ப்பிக்கப்பட்டுள்ளன.

(iv) இலங்கை நிர்வாக சேவையின் தரம் III இல் உள்ள 94 உத்தியோகத்தர்கள் சேவையில் நிரந்தரமாக்கப்பட்டுள்ளனர்.

(v) 2021 ஆம் ஆண்டில் இலங்கை நிர்வாக சேவையின் 35 உத்தியோகத்தர்கள் ஓய்வு பெறுவதற்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

(vi) 2021 ஆம் ஆண்டில் இலங்கை நிர்வாக சேவையின் 377 உத்தியோகத்தர்கள் இடமாற்றம் செய்யப்பட்டுள்ளனர்.

(vii) 2021 ஆம் ஆண்டில் இலங்கை நிர்வாக சேவையின் 23 உத்தியோகத்தர்கள் மாகாண சபைகளுக்கு விடுவிக்கப்பட்டுள்ளனர்.

(viii) 2021 ஆம் ஆண்டில் இலங்கை நிர்வாக சேவையின் 294 உத்தியோகத்தர்களுக்கு பொதுச் சேவை ஆணைக்குழுவின் அங்கீகாரத்திற்கு உட்பட்டு பதிற் கடமை புரிவதற்கு/ கடமைகளை நிறைவேற்றுவதற்கு நியமனங்கள் வழங்கப்பட்டுள்ளன.

03. வெளிநாடுகளில் உள்ள இலங்கை தூதரகங்களில் பணியாற்றுவதற்காக இலங்கை நிர்வாக சேவையிலிருந்து உத்தியோகத்தர்களைத் தெரிவு செய்வதற்காக 78 பேர் முதலாவது நேர்முகப்பரீட்சைக்கு உட்படுத்தப்பட்டனர்.

04. இலங்கை நிர்வாக சேவை உத்தியோகத்தர்களின் பின்வரும் நிர்வாக செயற்பாடுகளை நிகழ்நிலை ஊடாக நிறைவேற்றுவதற்கு புதிய தகவல் முகாமைத்துவ முறைமை அறிமுகப்படுத்தப்பட்டது.

(i) இலங்கை நிர்வாக சேவை உத்தியோகத்தர்களின் சேவையை நிரந்தரமாக்கும் விண்ணப்பத்தை சமர்ப்பித்தல்.

(ii) இலங்கை நிர்வாக சேவையின் தரம் II க்கு தரம் உயர்த்துவதற்கான விண்ணப்பங்களை சமர்ப்பித்தல் (2021.09.01 ஆந் திகதிக்கு அல்லது அதற்கு பின்னர் தகுதி பெறும் உத்தியோகத்தர்கள் மட்டுமே புதிய முறையைப் பயன்படுத்த வேண்டும், ஏனைய உத்தியோகத்தர்கள் ஏற்கனவே உள்ள முறையைப் பயன்படுத்த வேண்டும்.)

(iii) இலங்கை நிர்வாக சேவையில் உள்ள உத்தியோகத்தர்களின் பதவிக்கு முறையான ஒழுங்கில் நியமனத்திற்கான விண்ணப்பங்களை சமர்ப்பித்தல்.

(iv) இலங்கை நிர்வாக சேவையில் பதிற் கடமையாற்றுவதற்கு/ கடமைகளை நிறைவேற்றுவதற்கான விண்ணப்பங்களை சமர்ப்பித்தல்

(v) இலங்கை நிர்வாக சேவை உத்தியோகத்தர்களின் வருடாந்தம் அல்லாத இடமாற்ற விண்ணப்பங்களை சமர்ப்பித்தல்

பாராளுமன்ற அலுவல்கள் பிரிவு

- தேவையான மனித வளங்களை வழங்குதல்
  - கௌரவ பாராளுமன்ற உறுப்பினர்களின் தனிப்பட்ட பணிக்குழாமினரை நியமித்தல்
  - தேவைக்கேற்ப தனிப்பட்ட பணிக்குழாமில் திருத்தம் செய்தல்.
  - கௌரவ பாராளுமன்ற உறுப்பினர்களின் தனிப்பட்ட உத்தியோகத்தர்கள் மற்றும் ஏனைய அரச உத்தியோகத்தர்களின் விழிப்புணர்வு மற்றும் பயிற்சி திட்டங்களை நடைமுறைப்படுத்துதல்.
- நிதி வழங்களை வழங்குதல்
  - கௌரவ பாராளுமன்ற உறுப்பினர்களின் தனிப்பட்ட பணிக் குழாமிற்கான சம்பளம் வழங்குதல்
  - சேவையை நிறைவு செய்த கௌரவ பாராளுமன்ற உறுப்பினரின் தனிப்பட்ட ஊழியர்களுக்கு பணிக்கொடை கொடுப்பனவு
- பௌதீக வளங்கள் மற்றும் சேவை வசதிகளை வழங்குதல்.
  - அலுவலக உபகரணங்கள் மற்றும் தொடர்பாடல் சாதனங்கள் வழங்குதல்.
  - தீர்வையற்ற வாகன இறக்குமதி அனுமதிப்பத்திரங்களை வழங்குதல்
  - கௌரவ பாராளுமன்ற உறுப்பினர்களுக்கான குழுக் காப்புறுதித் திட்டத்தை நடைமுறைப்படுத்துதல்
- கொள்கை வகுப்பு
  - தேவையான அமைச்சரவை விஞ்ஞாபனங்களை சமர்ப்பித்து கொள்கை சார்ந்த முடிவுகளைப் பெறுதல்.
  - கொள்கை சார்ந்த முடிவுகளை நடைமுறைப்படுத்துதல்.

தேசிய மொழிகள் பிரிவு

பின்னணி

ஆகஸ்ட் 9, 2020 தேதியிட்ட 2187/27 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானி அறிவித்தலின் படி, அரச மொழிகள் / தேசிய மொழிகள் என்ற பாடம் பொது சேவைகள், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சுக்கு ஒதுக்கப்பட்டுள்ளது. மேலும் தேசிய மொழிகள் பிரிவு, சமூகத்தில் நல்லிணக்கத்தை ஆதரிப்பதற்காக உத்தியோகபூர்வ மொழிக் கொள்கையை (OLP) திறம்பட செயல்படுத்துவதை நோக்கமாகக் கொண்டு அமைச்சின் ஒரு அங்கமாகச் செயல்படுகிறது. உத்தியோகபூர்வ மொழிக் கொள்கையை திறம்பட செயல்படுத்துவதற்காக அடையாளம் காணப்பட்ட திட்டங்கள் வெவ்வேறு அடுக்குகளிலும் வெவ்வேறு வழிமுறைகளிலும் வழங்கப்படுகின்றன.

1956 வட்டார அளவில் உள்ள அழைப்பு மையம் மற்றும் மொழி மையங்கள் அரசு அலுவலர்கள் மற்றும் பொதுமக்களுக்கு மொழித் திட்டங்களை வழங்குவதற்குத் தேவையான சேவைகளையும் வசதிகளையும் வழங்குகின்றன. கருவூல ஆதரவு திட்டத்திற்கு கூடுதலாக, தேசிய மொழிகள் சமத்துவ முன்னேற்றத் திட்டம் (NLEAP) மற்றும் வலுவூட்டல் நல்லிணக்க செயல்முறை (SRP) எனப்படும் மானியத் திட்டங்களின் மூலம் கனடிய அரசாங்கமும் ஐரோப்பிய ஒன்றியமும் ஆதரிக்கின்றன.

தேசிய மொழிகள் பிரிவின் நோக்கங்கள்

• உத்தியோகபூர்வ மொழிக் கொள்கையைத் திட்டமிடுதல், செயல்படுத்துதல் மற்றும் மேற்பார்வை செய்தல்

• அரசாங்கத் துறையில் இருமொழியை உருவாக்குவதற்கு பொருத்தமான சூழலை உருவாக்குதல்.

• உத்தியோகபூர்வ மொழிகள் கொள்கை தொடர்பாக பொது மக்களுக்கு அதிகாரமளித்தல்.

தேசிய மொழிகள் பிரிவின் செயல்பாடுகள்

• அரசு நிறுவனங்களில் இருமொழி சூழலை வலுப்படுத்துதல்

• இருமொழி சேவை வழங்கலில் பொது அதிகாரிகளின் திறனை மேம்படுத்துதல்

• பொது மக்களிடையே அதிகாரப்பூர்வ மொழிக் கொள்கையை ஊக்குவித்தல்

• உத்தியோகபூர்வ மொழிகள் கொள்கை அமலாக்கத்தில் அரசாங்க நிறுவனங்களுக்கான அங்கீகாரம

சாதனைகள்

தேசிய மொழிகள் பிரிவுக்கு ரூ. இந்த ஆண்டு அலுவல் மொழிக் கொள்கையை அமல்படுத்த 21.35 மில்லியன் மற்றும் ரூ.7.34 மில்லியன் செலவிடப்பட்டது. மொத்த ஒதுக்கீட்டில், நிரல் பொருள் குறியீடு (2509) இன் கீழ் தேசிய மொழி வளர்ச்சிக்கு ரூ 20 மில்லியனும், பொருள்

குறியீட்டின் (1703) கீழ் அதிகாரப்பூர்வ மொழிக் கொள்கையைப் பொருத்துவதற்கு ரூ 1.35 மில்லியனும் ஒதுக்கப்பட்டது.

கோவிட் 19 தொற்று நிலைமை காரணமாக, வருடாந்திர செயல் திட்டத்தில் முன்மொழியப்பட்ட அனைத்து நடவடிக்கைகளையும் மேற்கொள்ள முடியவில்லை. எனவே, நிதியமைச்சகத்தின் வழிகாட்டுதல்களின் அடிப்படையில் ரூ.7.04 மில்லியன் அளவுக்கு செயல்படுத்தப்பட்ட நடவடிக்கைகளின் அடிப்படையில் செயல் திட்டம் திருத்தப்பட்டது

இந்த வரைவு அறிக்கையில் கொடுக்கப்பட்ட விபரங்கள் யாவும் உண்மை மற்றும் சரியானவை என்பதை நான் இதன் மூலம் சான்றளிக்கின்றேன்.

.....

ஜே.ஜே. ரத்னசிரி
செயலாளர்
அரச சேவைகள், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சு

ஆண்டின் ஒட்டுமொத்த நிதி செயல்திறன்

2021

ஏசீஏ- எப்

2021 டிசம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான

நிதிச் செயலாற்றுகைக் கூற்று

(ரூபா)

பாதீட்டு 2021		குறிப்பு	உண்மை நிலை 2021	திருத்தப்பட்ட 2020	
	வருமானப் பெறுகைகள்				
-	வருமான வரி	1	-	-	
-	உள்ளூர் பொருட்கள் மற்றும் சேவைகள் மீதான வரி	2	-	-	ஏசீஏ-1
-	சர்வதேச வர்த்தகம் மீதான வரிகள்	3	-	-	
1,200,000,000.00	வரியில்லாத வருமானங்களும் ஏனையவையும்	4	1,288,512,491	1,152,983,938	
1,200,000,000.00	**மொத்த வருமானப் பெறுகைகள் (அ)**		**1,288,512,491**	**1,152,983,938**	
	வருமானமற்ற பெறுகைகள்				
-	திறைசேரி பணிமுற்பணங்கள்		1,789,170,000	663,062,717	ஏசீஏ-3
-	வைப்புகள்		43,153,157	119,984,077	ஏசீஏ-4
-	முற்பணக் கணக்குகள்		53,491,275	126,409,395	ஏசீஏ-5
-	ஏனைய பிரதான பேரேட்டு கணக்கின் பெறுகைகள்		-	-	
-	**மொத்த வருமானம் அல்லாத பெறுகைகள் (ஆ)**		**1,885,814,432**	**909,456,189**	
1,200,000,000.00	**மொத்த வருமானப் பெறுகைகளும் வருமானம் அல்லாத பெறுகைகளும் இ = (அ)+(ஆ)**		**3,174,326,923**	**2,062,440,127**	
	திறைசேரிக்கான அனுப்பீடு (ஈ)				
	தேறிய வருமானம் கிடைப்பனவு மற்றும் வருமானம் அல்லாத கிடைப்பனவு உ = (இ)-(ஈ)		**3,174,326,923**	**2,062,440,127**	
	கழி : செலவினம்				
	மீண்டுவரும் செலவினம்				
15,586,674,000.00	சம்பளம், கூலி, மற்றும் ஏனைய ஊழியர் அனுகூலங்கள்	5	14,429,948,059	7,848,258,218	
264,206,000.00	ஏனைய பொருட்கள் சேவைகள்	6	203,401,934	217,874,461	ஏசீஏ-2(ii)
278,170,000.00	மானியங்கள், கொடைகள் மற்றும் மாற்றல்கள்	7	236,731,744	364,642,548	
-	வட்டிக் கொடுப்பனவுகள்	8		-	
450,000.00	ஏனைய மீண்டுவரும் செலவினம்	9	429,370	386,714	
16,129,500,000.00	**மொத்த மீண்டுவரும் செலவினம் (ஊ)**		**14,870,511,108**	**8,431,161,940**	
	மூலதனம் செலவினம்				
49,010,000.00	மூலதனச் சொத்துக்களின் புணரமைப்பும், மேம்படுத்தலும்	10	33,695,645	20,101,395	
463,745,000.00	மூலதனச் சொத்துக்களின் கொள்வனவு	11	379,872,930	571,069,289	ஏசீஏ-2(ii)
151,145,000.00	மூலதன மாற்றல்கள்	12	70,513,258	67,728,425	
-	நிதிச் சொத்துக்களின் கொள்வனவு	13		-	
411,100,000.00	திறன் விருத்தி	14	42,292,593	15,497,836	
104,500,000.00	ஏனைய மூலதனச் செலவினங்கள்	15	6,168,255	51,688,705	
1,179,500,000.00	**மொத்த மூலதனம் செலவினம் (எ)**		**532,542,681**	**726,085,650**	
	வைப்புக் கொடுப்பனவுகள்		52,653,712	102,084,656	ஏசீஏ-4
	முற்பணக் கொடுப்பனவுகள்		55,490,301	61,120,746	ஏசீஏ-5
	ஏனைய பிரதான பேரேட்டுச் செலவினம்		-	-	
	மொத்தபிரதான பேரேட்டுச் செலவினம் (ஏ)		**108,144,013**	**163,205,402**	
17,309,000,000.00	**மொத்த செலவினம் ஐ = (ஊ+எ+ஏ)**		**15,511,197,802**	**9,320,452,992**	
	டிசம்பர் 31 இல் உள்ளவாறு மீதி ஒ = (உ-ஐ)		**(12,336,870,879)**	(7,258,012,864)	
	பணிமுற்பண இணக்க அறிக்கையின்படி மீதி		(12,336,870,879)	-	ஏசீஏ-7
			-	-	ஏசீஏ-3
	டிசம்பர் 31ல் உள்ளவாறான பணிமுற்பண மீதி		**(12,336,870,879)**	**(7,258,012,864)**	

ஏசிஏ-7

பணிமுற்பண இணக்க அறிக்கை

ரூபா

	அறிக்கையிடல் நிறுவனத்தின் சார்பாக பிற நிறுவனங்களால் சேகரிக்கப்படும் வருவாய்	1,274,440,152	
	மற்ற நிறுவனங்களின் சார்பாக அறிக்கையிடும் நிறுவனத்தால் ஏற்படும் செலவு	543,612	
	பிற நிறுவனங்களின் அட்வான்ஸ் "பி" கணக்கில் அறிக்கையிடல் நிறுவனத்தி செய்யப்பட்ட வரவு	475,884	
	பிற நிறுவனங்களால் அறிக்கையிடல் நிறுவனத்தின்அட்வான்ஸ் "பி" கணக்கிற்கு செய்யப்பட்ட செலவு	24,260,356	
			1,299,720,004
குறைவாக:	மற்ற நிறுவனங்களின் சார்பாக அறிக்கையிடல் நிறுவனத்தால் சேகரிக்கப்படும் வருவாய்	40,351,912	
	அறிக்கையிடல் நிறுவனத்தின் சார்பாக மற்ற நிறுவனங்களால் செய்யப்படும் செலவு	13,569,070,399	
	பிற நிறுவனங்களின் அட்வான்ஸ் "பி" கணக்கில் அறிக்கையிடல் நிறுவனத்தி செய்யப்பட்ட செலவு	24,895,791	
	பிற நிறுவனங்களால் அறிக்கையிடல் நிறுவனத்தின்அட்வான்ஸ் "பி" கணக்கிற்கு செய்யப்பட்ட வரவு	2,272,781	13,636,590,883
	2021 டிசம்பர் 31 இல் உள்ள பணிமுற்பண இணக்க அறிக்கையின்படி மீதி		(12,336,870,879)

ஏசீஏ -பீ

2021 டிசம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று

	குறிப்பு	உண்மை நிலை 2021 ரூபா	2020 ரூபா
நிதி சொத்துக்கள் அற்றது			
ஆதனம், பொறித் தொகுதி மற்றும் உபகரணம்	ஏசீஏ-6	8,282,093,942	7,920,846,630
நிதி சொத்துக்கள்			
முற்பணக் கணக்குகள்	ஏசீஏ-5/5ஏ	184,779,737	231,373,441
காசு மற்றும் காசுக்குச் சமனானவை	ஏசீஏ-3	-	-
மொத்த சொத்துக்கள்		**8,466,873,679**	**8,152,220,071**
தேறிய சொத்துக்கள் / உரிமைப் பங்கு			
திறைசேரிக்கு தேறிய சொத்துக்கள்		(25,874,333)	(37,373,913)
ஆதனம், பொறித் தொகுதி மற்றும் உபகரண ஒதுக்கம்		8,282,093,942	7,920,846,630
வாடகை மற்றும் பணி முற்பண ஒதுக்கம்	ஏசீஏ-5பீ	76,716,796	125,309,526
நடைமுறைப் பொறுப்புக்கள்			
வைப்புக் கணக்குகள்	ஏசீஏ-4	133,937,274	143,437,828
தீர்க்கப்படாத பணிமுற்பண மீதி	ஏசீஏ-3	-	-
மொத்தப் பொறுப்புக்கள்		**8,466,873,679**	**8,152,220,071**

பக்க இலக்கம் 1 முதல் 48 வரை ஏசீஏ 1 முதல் ஏசீஏ 7 வரையான மாதிரிப் படிவங்களின் மூலம் சமர்ப்பிக்கப்படுகின்ற கணக்குத் தகவல்கள் மற்றும் குறிப்புகளின் பக்க இலக்கம் 49 முதல் 70 வரை உள்ளடங்கியுள்ள ஏனைய கணக்குக் குறிப்புகளின் விபரமும் இந்த இறுதிக் கணக்குகளில் உள்ளடங்கிய பகுதியாகும். இந்த நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கும் போது பொதுவாக ஏற்றுக் கொள்ளப்பட்ட கணக்கீட்டுக் கொள்கைகளுக்கு இணங்கியதாக மேற்கொள்ளப்பட்டுள்ள அதேவேளையில் இங்கு நிதிக்கூற்றுக்களின் குறிப்புகளின் மூலம் வெளிப்படுத்தப்பட்டுள்ளவாறு, மிகவும் பொருத்தமான கணக்கீட்டுக் கொள்கைகள் பயன்படுத்தப்பட்டுள்ளன. அதனால் மேலேயுள்ள இறுதிக் கணக்குகளில் குறிப்பிடப்பட்டுள்ள தொகைகள், அது தொடர்பான கணக்குக் குறிப்புகள் மற்றும் ஏனைய கணக்குத் தகவல்கள் திறைசேரிப் புத்தகங்களுடன் சீராக்கம் செய்யப்பட்டுள்ளது என்பதையும் அவை அந்தத் தொகைகளுடன் உடன்படுகின்றது என்பதையும் இத்தால் சான்றுப்படுத்துகிறோம்.

நிதி நிருவாகத்திற்காக வினைத்திறன்மிக்க உள்ளக நிருவாகத் தொகுதியொன்று அறிக்கையிடும் நிறுவனத்தில் காணப்படுகின்றது எனவும் நிதி நிருவாகத்திற்காக உள்ளக நிருவாகத் தொகுதியின் செயற்திறனை மேற்பார்வை செய்வதற்கும் அதற்கு அமைவாக அந்தத் தொகுதியை வினைத்திறனுடன் நடைமுறைப்படுத்துவதற்குத் தேவையானவாறு மாற்றங்களை மேற்கொள்வதற்கும் அடிக்கடி மீளாய்வுகள் மேற்கொள்ளப்படுகின்றது எனவும் இத்தால் சான்றுப்படுத்துகிறோம்.

.....

பிரதான கணக்கீட்டு அலுவலர்

பெயர் : ஜே.ஜே.ரத்னசிரி

பதவி : செயலாளர்

திகதி : 25 .02 .2022

J.J. Rathnasiri
Secretary
Ministry of Public Services, Provincial Councils and Local Government
Independence Square
Colombo 07

.....

பிரதான நிதி அலுவலர்

பெயர் : எ.எச். எம். கே.கே.எ.ஹேரத்

திகதி : 25.02. 2022

A.H.M.K.K.A Herath
Chief Finance Officer
Ministry of Public Services, Provincial Councils and Local Government
Independence Square
Colombo 07

ஏசீஏ - சீ

2021 டிசம்பர் 31 இல் உள்ளவாறான காசுப் பாய்ச்சல் கூற்று

	உண்மை 2021 ரூபா	திருத்தப்பட்ட 2021 ரூபா
தொழிற்பாட்டு செயற்பாடுகளிலிருந்தான காசுப் பாய்ச்சல்		
மொத்த வரிப் பெறுகைகள்	-	-
கட்டணங்கள், தண்டப்பணங்கள், தண்டனைகள் மற்றும் உத்தரவுப் பத்திரங்கள்	14,072,339	7,267,467
இலாபம்	-	-
வருமானம் அல்லாத பெறுகைகள்	-	-
ஏனைய வருமான தலைப்புகளுக்காக சேகரிக்கப்பட்ட வருமானம்	40,351,912	16,995,974
கிடைக்கப்பெற்ற கட்டுநிதி	1,789,170,000	663,062,717
முற்பணங்களை அறவிடல்	54,126,710	98,790,535
வைப்புக்களின் பெறுகை	43,153,157	11,510,409
செயற்பாடுகளிலிருந்து உருவாக்கப்பட்ட மொத்தக் காசு (அ)	**1,940,874,118**	**797,627,101**
கழி - பகிர்ந்தளிக்கப்பட்ட காசு		
ஆளுக்குரிய வேதனங்கள் மற்றும் தொழிற்பாடுக் கொடுப்பனவுகள்	1,347,172,942	411,758,827
மானியங்களும் மாற்றுக் கொடுப்பனவுகளும்	16,004,195	21,186,330
ஏனைய செலவினத் தலைப்புகளுக்காக மேற்கொள்ளப்பட்ட செலவினம்	543,612	7,684,444
திறைசேரிக்குத் தீர்க்கப்பட்ட பணிமுற்பணம்		
முற்பணக் கொடுப்பனவு	53,693,404	110,585,744
வைப்புக் கொடுப்பனவு	52,653,711	6,719,745
தொழிற்பாடுகளுக்கு பகிர்ந்தளிக்கப்பட்ட மொத்தக் காசு (ஆ)	**1,470,067,864**	**557,935,090**
தொழிற்பாடு செயற்பாடுகளிலிருந்தான தேறிய காசுப் பாய்ச்சல் (இ)=(அ)-(ஆ)	**470,806,254**	**239,692,011**
முதலீட்டு செயற்பாடுகளிருந்தான காசுப் பாய்ச்சல்		
வட்டி	-	-
பங்கு இலாபம்	-	-
உரிமை இழந்த ஏற்பாடுகள் மற்றும் பொளதீக சொத்துக்களின் விற்பனை	-	-
உப கடன்கள் மீதான அறவீடுகள்	-	-
காசு (ஈ)	**-**	**-**
கழி - பகிர்ந்தளிக்கப்பட்ட காசு:		
கொள்வனவு அல்லது பௌதீகச் சொத்தக்களின் நிர்மாணிப்பு மற்றும் ஏனைய முதலீடுகளின் கொள்வனவு	470,806,254	239,692,011
முதலீட்டுச் செயற்பாடுகளுக்கு வழங்கப்பட்ட மொத்தக் காசு (உ)	**470,806,254**	**239,692,011**
முதலீட்டுச செயற்பாடுகளிலிருந்தான தேறிய காசுப் பாய்ச்சல் (ஊ)=(ஈ)-(உ)	**(470,806,254)**	**(239,692,011)**
தொழிற்பாடுகள் மற்றும் முதலீட்டுச் செயற்பாடுகளிலிருந்தான தேறிய காசுப் பாய்ச்சல் (எ)=(இ)+(ஊ)	**-**	**(0.00)**
நிதிச் செயற்பாடுகளிலிருந்தான காசுப் பாய்ச்சல்		
உள்ளூர்க் கடன்கள்	-	-
வெளிநாட்டுக் கடன்கள்	-	-
பெற்ற நன்கொடைகள்	-	-
நிதி நடவடிக்கைகளிலிருந்து உருவாக்கப்பட்ட மொத்தக் காசு (ஏ)	**-**	**-**
கழி - பகிர்ந்தளிக்கப்பட்ட காசு:		
உள்ளூர் கடன்கள் மீதான மீளக் கொடுப்பனவுகள்	-	-
வெளிநாடுக் கடன்கள் மீதான மீளக் கொடுப்பனவுகள்	-	-
